# 19 சிறந்த நோக்கமும் புதுவாழ்வும்

**இயேசு பூமியிலே தனது பணியை ஆரம்பிப்பதற்கு முன் தெளிவான விளக்கத்துடன் முன்னெடுத்த முறை பற்றி கடந்த பாடத்தில் விளங்கிக் கொண்டோம். அவருடைய பணியின் காலம் முழுவதும் அவர் கொடுத்த சிறந்த போதனைகளையும் செயல்களையும் கண்டு அனுபவித்தவர்கள் அவரால் அழைக்கப்பட்டு பயிற்சி பெற்றுக் கொண்ட சீடர் குழுவாகும். அவருடைய சுய பணியை முடிவிற்கு கொண்டு வருவதைப் பற்றி சரியான விளக்கத்தின் மூலம் சீடர்களை திடப்படுத்தும் ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தையும் அதனுடன் தொடர்பான நிகழ்வுகளையும் இந்தப் பாடத்தினூடாக விளங்கிக் கொள்ள முற்படுவோம்.**

**லூக்கா:** 9:28-36

இறையரசைக் கட்டியெழுப்பும் பணியில் இயேசு ஈடுப்பட்டபோது யூத சமுதாயத்தில் அவரைப்பற்றி பலவிதமான கருத்துக்கள் எழுந்தன. அப்போது இயேசு தனது சீடர்களிடம் அவர்கள் என்னை யார் என்று கூறுகின்றார்கள் எனக் கேட்டார். சீமோன் பேதுரு கூறிய கருத்தை லூக்கா 9:18-10 வாசிக்கவும்.

கலிலேயாக் கடலில் ஏற்பட்ட புயலை இயேசு அமைதிபடுத்திய சந்தர்ப்பத்தில் அதைக் கண்ட சீடர்கள் ஆச்சரியமடைந்து அவர் யார் என்று வினவத் தொடங்கினர். இயேசு ஜெபம் செய்வதற்கும் தியானிப்பதற்கும் எப்போதும் அமைதியான சூழலைத் தெரிவு செய்தார். ஒரு நாள் அவர் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோருடன் ஜெபம் செய்வதற்காக ஓர் மலைக்குச் சென்றார். அந்த இடத்தில் நிகழ்ந்தவைகளை வாசித்துப் பார்ப்போம்.

**லூக்கா:** 9:28-36
**தோற்றம் மாறுதல் / மறுரூபமடைதல்**

இயேசுவின் வாழ்விலே மிக முக்கியமான சம்பவமாகும். இது பிரதான சீடர்கள் மூவரும் கண்ட உயிருள்ள காட்சியின் அனுபவமாகும். இயேசு உயிர்த்தெழுந்ததும் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு சீடர்கள் சாட்சி பகிர்ந்ததின் அடிப்படையானது இவ்வனுபவமே ஆகும்.

**இந்த சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்பட்ட
விசேட நிகழ்வினைப் பார்போம்**

| | |
|---|---|
| * இயேசு ஒரு மலையில் ஏறி ஜெபம் செய்து கொண்டு இருக்கும்போது | * அவருடைய முகத்தோற்றம் மாறியது |
| * இயேசுவின் வஸ்திரங்கள் | * வெண்மையாகிப் பிரகாசித்தது. |
| * அவருடைய இருபுறமும் | * மோசேயும் எலியாவும் மகிமையுடன் காணப்பட்டனர். |
| * மோசேயும் எலியாவும் இயேசுவுடன் கலந்துரையாடல் | * எருசலேமில் நிறைவேற்றப் போகும் அவரின் மரணத்தைக் குறித்து பேசினார். |
| * தூக்கத்துடன் இருந்த சீடர்கள் விழித்துக் கொண்டனர் | * இயேசு மகிமையுடன் இருப்பதையும் அவருடன் இருவர் இருப்பதையும் கண்டார்கள் |
| * மோசேயும் எலியாவும் காணப் பட்டதன் நோக்கம் | * நியாயப் பிரமானமும் தீர்க்க தரிசனமும் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றப்பட்டது என்பதை அடையாளப்படுத்தல் |
| * இம்மூன்று சீடர்களும் கடவுளின் வாக்குறுதியைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் | |
| * சீடர்கள் மூவரும் | * சரியாக விளங்கிக் கொள்ளுதல் |

இயேசுவினுடைய முகத்தோற்றம் வேறுபட்டு, வஸ்திரம் வெண்மையாகப் பிரகாசித்தது. இதன் மூலம் அவருடைய மகிமையான தெய்வீகத்தின் அடையாளத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

எலியா தீர்க்கதரிசிகளில் முதன்மையானவராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். மோசே நியாயப் பிரமானத்தின் முதன்மையானவராக யூதர்கள் ஏற்றுக் கொண்டனர். எனவே இந்த வேளையில் நியாயப் பிரமானமும் தீர்க்கதரிசனமும் இயேசுவின் மூலம் முழுமையடைந்துள்ளது என்பதை சீடர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இவர்கள் இருவரும் இயேசுவுடன் அவர் எருசலேமில் நிறைவேற்றப் போகும் பாடு மரணத்தை குறித்து பேசிக்கொண்டிருந்தனர்.

பரிசுத்த வேதாகமத்திலே ''மேகம்'' இறைவனுடைய பிரசின்னத்தை குறிக்கின்றது. எனவே சீடர்களுக்கு இயேசுவின் தெய்வீகத்தை விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

இறைவனுடைய குரலினாலே இது மேலும் தெளிவாக்கப்பட்டன. ''இவரே என்னுடைய மைந்தன் நான் தேர்ந்துகொண்டவர் இவரே இவருக்கு செவி கொடுங்கள்'' சீடர்கள் இவ்வுண்மையான வாக்கின் மூலம் இயேசு இறைமகன் என உறுதி கொண்டார்கள்.

தோற்றம் மாறும் காட்சியைக் கண்ட சீடர்கள் மூன்று கூடாரங்களைக் கட்டி மலையிலே தங்கியிருக்க விரும்பினர். ஆனால் இயேசு அவருடைய இவ்வுலகப்பணி பரிபூரணம் அடைவதற்கு எருசலேமிற்கு போகவேண்டும் என்று திட்டவட்டமாக கூறினார். மனிதனுடைய பாவத்திற்காக தன்னுடைய வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும் என்பதனையும், எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் அவரின் வாழ்வின் தியாக பலியான அர்ப்பணிப்பு பற்றிய உறுதியைக் கொடுப்பதும் இச் சம்பவமே. இந்த இறைவார்த்தையை வாசிப்பதன் மூலம் கிறிஸ்துவுக்குள்ளே சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வழிநடத்தப்படுவோம்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றி சீடர்கள் பெற்றுக் கொண்ட அனுபவம் உண்மையான அனுபவமாகும். அவர் அருள் பொழிவு பெற்ற மெசியா ஆவார். அவர் எமது மீட்பராவார். விசுவாசத்துடன் அவரை ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் ஆயத்தமாக வேண்டும். உயிருள்ள இயேசுவைப் பற்றி சரியான கண்ணோட்டத்தோடு எங்களுடைய வாழ்வை ஒளியாக்குவோம். அவ்வாறே அவரைப் பின் தொடர்கின்றவர்களாக உலகத்திற்கு முன்மாதிரியாக வாழ முடியும்.

## செயற்பாடு

1. இயேசு மலையின் மேல் இருக்கும்போது சீடர்கள் மூவரும் கண்ட தோற்றம் மாறுதலை சுருக்கமாக எழுதுக.

2. சீடர்கள் இயேசுவை அறிந்து கொண்டதற்கு அமைய, நீர் இயேசுவை எவ்வாறு நோக்குகின்றீர்?